©
தமிழ் நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.00 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 48]

சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 17, 2014
மார்கழி 2, ஜய, திருவள்ளுவர் ஆண்டு–2045

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (2 D) எண் 6, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (JI)த் துறை, நாள் 5 பிப்ரவரி 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை – 600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 22.4.2010 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II—பிரிவு–2இல் 1 மற்றும் 2 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/224(a)/2010 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முந்திரித் தொழிலில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு, அந்த விவர அட்டவணையில் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

## முந்திரித் தொழிலில் வேலைவாய்ப்பு

| *தொடர் எண்* *(1)* | *பணியின் வகைகள் மற்றும் பணியாளர்கள்* *(2)* | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* *(3)* |
|---|---|---|
| (1) | தோடு உடைத்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 20.32 |
| (2) | தோல் உரித்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 23.70 |
| (3) | முந்திரிப் பருப்புத் துண்டுகளில் தோல் நீக்குதல், ஒடு உடைத்தல் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூ. 23.70 |
| (4) | தரம் பிரித்தல் | விளக்கங்களின் (2) ஆம் இனத்தில் குறிப்பிட்டுள்ள வேலை ஒன்றுக்கு ரூ. 149.15 |
| | *(i)* உடையாத வெள்ளை பருப்புகள் | |
| | *(ii)* தீயிலிட்டுச் சுடப்பட்ட உடையாத பருப்புகள், வகைப்படுத்தப்படாத (Desert) உடையாத பருப்புகள், கட்டல், கரி, முந்திரிப் பருப்புத் துணுக்குகள் | |
| | *(iii)* காலநிற பிருவல் | |
| | *(iv)* புழுக்குத்து, புழுக்குத்துப் பொடி, பிருவல் பொடி, சுட்ட சிறு பருப்புத் துணுக்குகள் | |
| | *(v)* தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள், தீயிலிட்டுச் சுடப்பட்ட தோடுகள் | |
| | *(vi)* கட்டல் துணுக்குகள் (பொடி) | |
| (5) | வறுத்தல் | நாளொன்றுக்கு ரூ. 231/– |
| (6) | போர்மா பணியாளர் | |
| (7) | எண்ணெய் பிழியும் இயந்திரம் இயக்குபவர் | |
| (8) | தகர வேலை செய்பவர் | |
| (9) | சிப்பம் செய்பவர் | |
| (10) | (a) மைகாட் | நாளொன்றுக்கு ரூ. 209.50 |
| | *(i)* மடிப்பினைச் சோதனையிடுவது உட்பட பல்வகைப் பணி. | |
| | *(ii)* முந்திரிப்பருப்பினைச் சோதனையிடல் | |
| | *(iii)* டப்பாவில் நிரப்புபவர் (*) | |
| | *(iv)* சமையலாள் | |
| | *(v)* பெருக்குபவர்/ துப்புரவுப் பணியாளர் | |

(*) வழக்கமான பணியுடன் டப்பாவினை நிரப்பும் பணியும் கூடுதலாகச் செய்கின்ற டப்பாவினை நிரப்புவருக்கு, அத்தகைய நாட்களில் மட்டும் நாளொன்றுக்கு ரூ. 9.50 கூடுதலாக வழங்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| | (b) மேற்பார்வையிடும் மைகாட் | நாளொன்றுக்கு ரூ. 231/– |
| (11) | மேற்பார்வையாளர்/மேஸ்திரி/காவலாள் | மாதமொன்றுக்கு ரூ. 5771.00 |
| (12) | எழுத்தர்/தட்டச்சர் | மாதமொன்றுக்கு ரூ. 5731.00 |

**விளக்கங்கள்:**— (1) அகவிலைப்படி:— (i) மாறுகின்ற அகவிலைப்படியானது, 827 என்ற டிசம்பர் 2010—க்கான நாகர்கோயில் மைய நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982=100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டது.) 827 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாள் ஒன்றுக்கு 25 காசுகள் (இருபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக, மாறுகின்ற அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* மாறுகின்ற அகவிலைப்படி திருத்தமானது முறையே ஜனவரியிலிருந்தும் ஜூலையிலிருந்தும் தொடங்குகின்ற முந்தைய ஆறு திங்களுக்கான நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டுடெண்ணை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்தும் அக்டோபர் திங்கள் முதல் நாளிலிருந்தும் செயலுக்கு வரும்.

*(iii)* முதல் கணக்கீடு, இனம் (ii)—இல் குறிப்பிடப்பட்டுள்ள நாகர்கோயில் மையத்திற்கான நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**(2) அகவிலைப்படி வழங்குவதற்காக வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு பணிச்சுமை:—**

கீழேயுள்ள விவர அட்டவணையில் (1) நெடுப்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்காணும் வகைகளைச் சேர்ந்த பணிகளில் அமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள், அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட பணியைச் செய்தால் மட்டுமே, மேலே நிர்ணயிக்கப்பட்டவறான அகவிலைப்படியைப் பெற உரிமையுடையவர்கள் ஆவர்.

| *பணி வகைகள்* | *வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு பணிச்சுமை* |
|---|---|
| *(1)* | *(2)* |
| (1) தோடு உடைத்தல் | 6 கிலோ கிராம் |
| (2) தோல் நீக்குதல் | 5 கிலோ கிராம் |
| (3) முந்திரிப் பருப்புத் துண்டுகளில் தோல் நீக்குதல், தோடு உடைத்தல் | 5 கிலோ கிராம் |
| **தரம் பிரித்தலில் பல்வேறு வகைகளைச் சேர்ந்த பணிகளைப் பொறுத்தவரையில் பணிச்சுமை** | |
| (1) உடையாத வெள்ளை பருப்புகள் | 100 கிலோ கிராம் |
| (2) தீயிலிட்டுச் சுடப்பட்ட உடையாத பருப்புகள், வகைப்படுத்தப்படாத உடையாத பருப்புகள், கட்டல், கரி, தீயிலிட்டச் சுடப்பட்ட துணுக்குகள் | 14 கிலோ கிராம் |
| (3) கார நிற பிருவல் | 10 கிலோ கிராம் |
| (4) புழுக்குத்து, புழுக்குத்துப் பொடி, கரவல் பொடி, சுட்ட சிறு பருப்புத் துணுக்குகள் | 6 கிலோ கிராம் |
| (5) தீயிலிட்டுச் சுடப்பட்ட துணுக்குகள், தீயிலிட்டுச் சுடப்பட்ட தோடுகள் | 12 கிலோ கிராம் |
| (6) கட்டல் துணுக்குகள் (பொடி) | 4 கிலோ கிராம் |

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) *(i)* மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30 ஆல் பெருக்க வேண்டும்.

*(ii)* நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 21, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I 2)த் துறை, 19 பிப்ரவரி 2014.]*

1982 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்துதலும், பணி நிலைமைகளும்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 33/1982) 6 ஆம் பிரிவைச் சேர்ந்த (3) மற்றும் (5) உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்திற்கு பின்வரும் உறுப்பினர்களை, இதனால் நியமனம் செய்கிறார்.

**அ. அரசு பிரதிநிதிகள்:**

| | | |
|---|---|---|
| 1. மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் | – | தலைவர் |
| 2. தொழிலாளர் நலத் துறை ஆணையாளர் சென்னை–600 006. | – | உறுப்பினர் |
| 3. அரசு செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 009. | – | உறுப்பினர் |
| 4. அரசு செயலாளர், நிதித் துறை, சென்னை–600 009. | – | உறுப்பினர் |
| 5. அரசு செயலாளர், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை–600 009. | – | உறுப்பினர் |
| 6. அரசு செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை–600 009. | – | உறுப்பினர் |
| 7. அரசு முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை, சென்னை–600 009. | – | உறுப்பினர் |

**ஆ. வேலையளிப்பவர்களின் பிரதிநிதிகள்:**

| | | |
|---|---|---|
| 1. தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம். எண் 331, அண்ணா சாலை, நந்தனம், சென்னை–600 035. | – | உறுப்பினர் |
| 2. தலைமைப் பொறியாளர், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், காமராஜர் சாலை, சென்னை–600 005. | – | உறுப்பினர் |
| 3. தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலைத் துறை, சேப்பாக்கம்,சென்னை.600 005. | – | உறுப்பினர் |
| 4. தலைமைப் பொறியாளர், பொதுப் பணித் துறை சேப்பாக்கம், சென்னை.600 005. | – | உறுப்பினர் |

5. நகராட்சி நிருவாக ஆணையாளர், – உறுப்பினர்
சேப்பாக்கம், சென்னை–600 005.

6. திரு. எஸ். பிரசாத், – உறுப்பினர்
50, யமுனை தெரு,
யாகப்ப நகர், தஞ்சாவூர்.

7. திரு. பொறியர் டி. ஜெயகுமார் – உறுப்பினர்
1999, ஜே.ஜே. நகர்,
எண் 1, டோல் கேட்,
பிச்சாண்டார் கோவில்,
திருச்சிராப்பள்ளி.

8. திரு. எம். தங்கமணி, முன்னாள் M.C., – உறுப்பினர்
11–J, ஆவாரங்காடு,
முனியப்பன் கோயில் அருகில்,
பள்ளிப்பாளையம்,
நாமக்கல்–638 006.

9. திரு. எஸ். அசோகன், – உறுப்பினர்
எண். 38, சின்னப்ப நகர்,
5வது கிராஸ்,
பசுபதிபாளையம் அஞ்சல்,
கரூர் வட்டம், கரூர் மாவட்டம்.

**இ. உடலுழைப்புத் தொழிலாளர்களின் பிரதிநிதிகள் :**

1. திருமதி. எஸ். லட்சுமி – உறுப்பினர்
தலைவர், அமைப்புசாரா உடலுழைப்பு மற்றும்
கட்டுமானப் பிரிவு அண்ணா தொழிற்சங்கம்,
5/548, நாயக்கன்பாளையம், பாலமலை சாலை,
கோயமுத்தூர்–641 020.

2. திரு. ஆர் சாமிநாதன், – உறுப்பினர்
செயலாளர்,
77–A, அன்பு நகர், ராயனூர்,
டி. செல்லப்பாண்டிபாளையம் அஞ்சல்,
தோரணக்கல்பட்டி கிராமம், கரூர்–3.

3. திரு. யேசுதுரை, – உறுப்பினர்
அண்ணா கட்டிடத் தொழிற்சங்க மாவட்ட செயலாளர்,
கட்டுமான வாரிய சங்கம்,
253/C, சுகந்தகுளம் சாலை, தூத்துக்குடி–3.

4. திரு. ஆர்.டி. பழனி – உறுப்பினர்
அமைப்பாளர் தலைவர்,
அகில இந்திய கட்டுமான மற்றும் அமைப்புசாரா
தொழிற்சங்கங்களின் கூட்டமைப்புக் குழு,
11, புதிய பை–பாஸ் சாலை,
கிரீன் சர்க்கிள் அருகில், வேலூர்–4.

5. திரு. எஸ்.பி. முருகேசன் – உறுப்பினர்
மாவட்ட செயலாளர்,
அமைப்புசாரா உடலுழைப்பு மற்றும் கட்டுமானப்
பிரிவு அண்ணா தொழிற்சங்கம்
135, காமாராஜர் தெரு, தேனி–625 531.

6. திரு. எம். நாகராஜன், – உறுப்பினர்
மாவட்ட பொருளாளர்,
அண்ணா தொழிற்சங்கம்,
3/845, A–21, மருதுபாண்டியர் நகர்,
பாரதி நகர் (மேற்கு)
பரமகுடி–623 707.

7. திரு. என். மனோகர தாஸ், – உறுப்பினர்
தலைவர், அமைப்புசாரா கட்டுமானப் பிரிவு
பெரும்பள்ளிவிளை, திருவரம்பு அஞ்சல்,
கன்னியாகுமரி.

8. திரு. கே.கே. பாண்டியன், – உறுப்பினர்
மாவட்டச் செயலாளர், அண்ணா தொழிற்சங்கம்,
சிவகாசி (கிழக்கு) 3/44, விசாலாட்சி நகர்,
பி.பி. சாலை, சிவகாசி (கிழக்கு)

9. திரு எம். ஜெபமாலை பெர்னான்டோ, – உறுப்பினர்
மாவட்ட கழகப் பொருளாளர்,
4/90, புனித சேவியர் தெரு,
வீரபாண்டியன் பட்டினம்,
திருச்செந்தூர்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 36, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (K2)த் துறை, 30 ஏப்ரல் 2014.]*

1926 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 16/1026) 29 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு 1927 ஆம் ஆண்டு தொழிற்சங்கங்கள் ஒழுங்குமுறை விதிகளில் செய்யக் கருதியுள்ள பின்வரும் வரைவுத் திருத்தங்கள் மேற்சொன்ன சட்டத்தின் 30 ஆம் பிரிவில் கோரியுள்ளவாறு, பொது தகவலுக்காக இதனால் வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த வரைவு அறிவிக்கை, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து மூன்று திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவான மூன்று திங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக அரசு செயலாளர், தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தங்கள்

மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளில், (1) பகுதி 14இல் ரூபாய் 100/– (ரூபாய் நூறு மட்டும்) என்ற தொடருக்குப் பதிலாக, ரூபாய் 1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) என்னும் தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

(2) பகுதி 15–இல் துணைப்பகுதி (2)–இல் ரூபாய் 25/– (ரூபாய் இருபத்தைந்து மட்டும்) என்ற தொடருக்குப் பதிலாக ரூபாய் 250/– (ரூபாய் இருநூற்று ஐம்பது மட்டும்) என்னும் தொடர் அமைத்துக் கொள்ளப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

## வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை,

## அறிவிக்கை

*[அரசாணை (நிலை) எண் 153, வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி (UD4-2)த் துறை, 13 அக்டோபர் 2014.]*

தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர–நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 10 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தஞ்சாவூர் உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியில் கூடுதல் பகுதிகளைச் சேர்ப்பதற்கும், 25–9–1974 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II பிரிவு 2–இன் 495 மற்றும் 496 ஆம் பக்கங்களில் வெளியிடப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறையின் II (2)/RUL/4116/74 ஆம் எண் அறிவிக்கையின் பின்வரும் திருத்தத்தை செய்வதற்குமான அவருடைய நோக்கத்தை இதனால் அறிவிக்கிறார்.

2. இந்த வரைவு அறிவிக்கை, **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்பட்ட நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்கு பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும், இது தொடர்பாக, மேற்சொன்ன உள்ளூர் பகுதியிலுள்ள யாதொரு குடியிருப்பாளர் அல்லது யாதொரு உள்ளூர் அதிகாரி அல்லது நிறுவனத்திடமிருந்து மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர் மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனும் வரப்பெற்றால், தமிழ்நாடு அரசு அதனை உரியவாறு கருதிப்பார்க்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை எழுத்துமூலமாக அரசு செயலாளர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை, தலைமைச் செயலகம், புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவுத் திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில், அட்டவணைக்கு பதிலாக, பின்வரும் அட்டவணை அமைத்துக் கொள்ளப்பட வேண்டும், அதாவது:–

## அட்டவணை

| *தொடர் எண்* | *உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமத்தின் பெயர் மற்றும் எண்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | **தஞ்சாவூர்** | **தஞ்சாவூர் வட்டம்** |
| | | தஞ்சாவூர் நகராட்சி |
| | | வல்லம் பேரூராட்சி |
| | | 91 வாளமிராங்கோட்டை |
| | | 92 காட்டூர் |
| | | 93 மடிகை |
| | | 88 புதூர் |
| | | 87 கொல்லங்கரை |
| | | 86/1&2 கொல்லங்கரை வல்லுண்டான் பட்டு |
| | | 80/1,2 நாஞ்சிக்கோட்டை |
| | | 82/1,2 நாஞ்சிக்கோட்டை வல்லுண்டான் பட்டு |
| | | 81/1,2 இனத்துக்கான்பட்டி |
| | | 76/2 பின்னைநல்லூர் |
| | | 65 திட்டை |
| | | 64/1,2 ராமாபுரம் |
| | | 55 நரசாநாயகபுரம் |
| | | 50 வெண்ணலோடை |
| | | 46 ராமநாதபுரம் (பகுதி) |
| | | 41 சென்னம்பட்டி |
| | | 42 திருக்கானூர்பட்டி (பகுதி) |

| *தொடர் எண்* | *உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமத்தின் பெயர் மற்றும் எண்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | 39 வல்லம் புதூர் சேத்தி |
| | | 38 குருவாடிப்பட்டி |
| | | 37 ஆலக்குடி |
| | | 36 வண்ணாரப்பேட்டை |
| | | 35 சீராளூர் |
| | | 49 சக்கரைசாமந்தம் |
| | | 54 பள்ளி அக்கிரகாரம் (பகுதி) |
| | | 66 கூடலூர் |
| | | 67/1,2 குருங்களூர் (குலமங்கலம்) |
| | | 78 புளியந்தோப்பு |
| | | 79 புதுப்பட்டினம் (பகுதி) |
| | | 72 ஆவுசாயபு தோட்டம் |
| | | 51/1, 51/2 மற்றும் 52 வேலூர் (தொகுப்பு) |
| | | 45 நீலகிரி தெற்குத் தோட்டம் (பகுதி) |
| | | 47 மேலவெளி<br>70/1,702, 70/3 கடகடப்பை |
| | | 69 கடகடப்பை தோட்டம் |
| | | 68 கஞ்சன் நாயகன் தோட்டம் |
| | | 44 பிள்ளையார்பட்டி |
| | | 48 பள்ளியேரி<br>71/1, 71/2 மேல் சித்தக்காடு |
| | | 77 குளிச்சப்பட்டு |
| | | 89 கண்டிதம்பட்டு |
| | | 90 விளார் |
| | | 90/1 சூரக்கோட்டை |
| | | 73 கொடிகாலூர் |
| | | 53 அக்கம்மா தோட்டம் |
| | | 27 திருமலை சமுத்திரம் |
| | | 30 கலிவிராயம்பேட்டை |
| | | 34 பிள்ளையார் நத்தம் |
| | | **பூதலூர் வட்டம்** |
| | | 26 மருதக்குடி |
| | | 28 செல்லப்பன்பேட்டை |
| | | 29 சித்திரக்குடி |

| *தொடர் எண்* | *உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமத்தின் பெயர் மற்றும் எண்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | 25 வீரமரசம்பேட்டை |
| | | 23 பூதலூர்<br>22/1,22/2 ஆவாரம்பட்டி |
| | | 20 தண்டராயன்பட்டி |
| | | 21 பாலாயிவயல் |
| | | 16 புதுப்பட்டி |
| | | 15 செங்கிப்பட்டி |
| | | 14 ஆச்சம்பட்டி |
| | | 13 பாலையப்பட்டி<br>(தெற்கு சேத்தி) |
| | | 12 பாலையப்பட்டி<br>(வடக்கு சேத்தி) |
| | | 17 சானூரப்பட்டி<br>19/1,19/2 நந்தவனப்பட்டி |
| | | 18 முத்துவீரகண்டியன்பட்டி |
| | | 11 மனையேறிப்பட்டி |
| | | 10 புதுக்குடி தெற்கு |
| | | 9 புதுக்குடி வடக்கு |
| | | 8 ராயமுண்டான்பட்டி |
| | | 7 வெண்டயம்பட்டி |
| | | 6 சுரக்குடிப்பட்டி<br>5/1, 5/2, காங்கேயம்பட்டி |
| | | 3 சோளகம்பட்டி |
| | | 1/2 இந்தளூர் (பகுதி) |
| | | **திருவையாறு வட்டம்** |
| | | 77/1,77/2,77/3 மற்றும் 77/4 மனக்கரம்பை |
| | | 76 ராஜேந்திரம் |
| | | 51 நாகத்தி |
| | | **பாபநாசம் வட்டம்** |
| | | 76/1 ராராமுத்திரைக்கோட்டை |
| | | 76/2 கத்திரிநத்தம் |
| | | 76/3 புகழ் குளிச்சப்பட்டு |
| | | 76/4 தளவாபாளையம் |
| | | 52 நெய்தலூர் |
| | | 79 அருள்மொழிப் பேட்டை |

| *தொடர் எண்* | *உள்ளூர் அமைப்புத் திட்டப் பகுதியின் பெயர்* | *வருவாய் கிராமத்தின் பெயர் மற்றும் எண்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| | | 80 பவானி அம்பாள் புரம் |
| | | 64 உதாரமங்கலம் |
| | | 66 ஆலங்குடி |

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.